# கேள்விப் பத்திர அறிவித்தல்

## வெலிகெபொல பிரதேச சபை – சபரகமுவ மாகாண சபை

01. கீழ் குறிபபிடப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக வெலிகெபொல பிரதேச சபையின் தவிசாளர் அவர்களால் 2021.08.09 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை விலை மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இல. | வேலை விடயம் | மதிப்பீட்டு வேலையின் சராசரிப் பெறுமதி (மி. ரூ.) | மீளச் செலுத்தப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூ.) | மீளச் செலுத்தப் படுகின்ற விலை மனுப்பபத்திர முறி (ரூ.) | ஒப்பந்தப் பதிவின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் பகல் நேரப் பராமரிப்பு மத்திய நிலையமொன்றை அமைத்தல் | 9.2 | 10,000.00 | 138,000.00 | C6/C7 |
| 2 | ஓப்பநாயக்க ஹெலபொஜுன்ஹல உணவகத்தை அமைத்தல் மற்றும் மலசலகூடத் தொகுதியை அமைத்தல் | 7.3 | 10,000.00 | 110,000.00 | C6/C7 |
| 3 | கந்தெவிஹார நீர் மூலாதாரத்திற்கான களஞ்சிய நீர்த் தாங்கியொன்றைப் பெற்றுக் கொள்ளல். | 4.5 | 7,500.00 | 68,000.00 | C7/C8 |
| 4 | வெலிகெபொல பிரதேச சபைக் கட்டிடத்தின் மேல் மாடியை அமைத்தல். | 9 | 10,000.00 | 135,000.00 | C6/C7 |
| 5 | பெலேந்த கந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் திருத்த வேலைகள் | 4 | 7,500.00 | 59,000.00 | C7/C8 |

02. இந்த விலை மனுக்கோரல் திறந்த போட்டி அடிப்படையிலான கேள்விப் பத்திர செயற்திட்டத்தின் கீழ் நடத்தப்படுவதுடன் தொழில் முயற்சி 50 மில்லியன் ரூபாவிலும் குறைவாக இருக்கின்றமையினால் 04/2006(ii) மற்றும் 04/2016(iii) ஆகிய இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின்படி பிரதேச முன்னுரிமை மற்றும் ஏற்புடைய (CIDA) தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிடங்களை அமைப்பதற்காக விலை மனுதாரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். அந்த சுற்றறிக்கைக்கு ஏற்புடையதாக பின்னர் விநியோகிக்கப்பட்ட 03/2020 மற்றும் 03/2020(i) ஆம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுற்றறிக்கைகளும் கேள்விப் பத்திர விவகாரங்களுக்காக ஏற்புடையதாக இருக்கும்.

03. 2021.07.22 ஆம் திகதி தொடக்கம் 2021.08.05 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை மேற்கூறியவாறு கட்டணங்களைச் செலுத்தி வெலிகெபொல பிரதேச சபையின் அலுவலகத்திலிருந்து விலை மனுக்கான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

04. எல்லா விலைமனுதாரர்களும் இந்த தொழில் முயற்சிக்காக மேற்கூறிய விலைமனு முறியின் பெறுமதிக்கு ஏற்புடையதாக விலைமனு முறியாக அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட விலைமனு முறியொன்று 2021.08.09 ஆம் திகதி தொடக்கம் 2021.12.06 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ‘‘தவிசாளர், பிதேச சபை, வெலிகெபொல’’ பயனாளி எனப் பெயர்க்குறித்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனு முறியொன்றின் மூலம் அல்லது ஏற்புடைய தொழில் முயற்சியின் பேரில் விலைமனுக் காப்புறுதிப் பணத்தொகையாக பிரதேச சபையில் தொடர்புடைய பணத்தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விலைமனுப் பத்திர ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

05. இந்த தொழில் முயற்சி தொடர்பான விபரங்களை வெலிகெபொல பிரதேச சபைக்கு வந்து அல்லது 045-2270410 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவையானவர்களுக்கு வாரத்தின் வேலைநாட்களில் இலவசமாக விலைமனுப் பத்திரங்களை சோதித்துப் பார்க்கலாம்.

06. விலைமனுப் பத்திரத்தின் முதற் பிரதிகளையும் துணைப் பிரதிகளையும் வெவ்வேறாக கடித உறைகளில் இட்டு ஒவ்வொரு கடித உறையிலும் இடது பக்க மேல் மூலையில் முதற் பிரதி, துணைப் பிரதி எனக் குறிப்பிட்டு முத்திரையிடப்பட்ட இரு கடித உறைகளையும் ஒரே கடித உறையிலிட்டு அதன் இடது பக்கமேல் மூலையில் தொழில் முயற்சியின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

07. அவ்வாறு முத்திரையிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களை 2021.08.09 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் வெலிகெபொல பிரசே சபையின் அலுவலகத்திலுள்ள முத்திரையிடப்பட்ட பெட்டியில் இடலாம். அல்லது அந்த விலைமனுப் பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம். தாமதமாகிக் கிடைக்கும் விலைமனுப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

08. 2021.08.09 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு வெலிகெபொல பிரதேச சபையின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரருக்கு அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அதில் கலந்து கொள்ளலாம்.

09. விலைமனுப் பத்திரங்களை முழுமையாக அல்லது பகுதிகளாக ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வெலிகெபொல பிரதேச சபையின் கேள்விப் பத்திரக் குழுவிற்கு இருக்கும்.

10. அனைத்து விலைமனுக்களும் 2021.11.08 ஆம் திகதிவரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

தவிசாளர்,

வெலிகெபொல பிரதேச சபை,

ஓப்பநாயக்க.

2021.07.22